**செய்தி வெளியீடு எண் : 346** **நாள் : 22.02.2024**

**செய்தி வெளியீடு**

ஹஜ் குழுசட்டம், 2002–ன்படி, (மையச் சட்டம் 35/2002) தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, அரசாணை (நிலை) எண்.44, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 15.06.2023–ல், 16 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் முதல் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத்துறை கூட்ட அரங்கில் 22.02.2024 அன்று நண்பகல் 04.00 மணியளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத் துறையின் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவராக திரு.P. அப்துல் சமத், எம்.எல்.ஏ., அவர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசாணை (ப) எண்.22, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 22.02.2024–ன்படி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

அரசு செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in